# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அனைத்துலகத் தேர்வு

## 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. எழுசுடர் ஞாயிறு என்று போற்றப்படுபவர்

அ) தொல்காப்பியர் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) திருவள்ளுவர் ☐ ஈ) கால்டுவெல் ☐

2. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடல் ________________

வாழ்க்கையைக் கூறுகிறது.

அ) உழவரது ☐ ஆ) கடற்றொழிலாளரது ☐

இ) வணிகரது ☐ ஈ) ஏதிலியரது ☐

3. உருபு ஏற்காத வேற்றுமை

அ) 2ஆம் வேற்றுமை ☐ ஆ) 3ஆம் வேற்றுமை ☐

இ) 1ஆம் வேற்றுமை ☐ ஈ) 4ஆம் வேற்றுமை ☐

4. நீண்டகாலம் உலகைக் காக்கும் கை

அ) இருகை ☐ ஆ) உழவர்கை ☐

இ) அருட்கை ☐ ஈ) வேந்தன்கை ☐

5. தன்மைப் பன்மைப் பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நாங்கள் ☐ ஆ) வந்தோம் ☐

இ) அவர்கள் ☐ ஈ) நீங்கள் ☐

6. கட்புலன் என்பது

அ) தோன்றற் புணர்ச்சி ☐ ஆ) கெடுதற் புணர்ச்சி ☐
இ) திரிதற் புணர்ச்சி ☐ ஈ ) இயல்புப் புணர்ச்சி ☐

7. ஈமத்தாழிகளில் இறந்தோரை அடக்கம் செய்த காலம்

அ) பழையகற்காலம் ☐ ஆ) பெருங்கற்காலம் ☐
இ) இரும்புக்காலம் ☐ ஈ ) செப்புக்காலம் ☐

8. போர்வீரர் தங்கும் இடம்

அ) பாசறை ☐ ஆ) பாதாளஅறை ☐
இ) நிலவறை ☐ ஈ ) பட்டறை ☐

9. **குறள்:** இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் ______________ சிறப்பு

அ) மழையும் ☐ ஆ) குழையும் ☐
இ) விழையும் ☐ ஈ ) இழையும் ☐

10. சிந்துவெளிச் சிற்பங்களை ஒத்த சிற்பங்கள் காணப்படும் இடம்

அ) திருகோணமலை ☐ ஆ) ஆனைக்கோட்டை ☐
இ) பொம்பரிப்பு ☐ ஈ ) ஆனைவிழுந்தான் ☐

11. **பழமொழி :** தான்பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்பது

அ) விடாப்பிடி ☐ ஆ) அறிவின் அடக்கம் ☐
இ) வீண்பெருமை ☐ ஈ ) எல்லை கடத்தல் ☐

12. எங்க போறியள்? என்ற பேச்சுவழக்குச் சொல்லை, செவ்வழக்காக மாற்றினால்

அ) எங்கே போகின்றீர்கள்? ☐ ஆ) எங்கே போறீர்கள்? ☐
இ) எங்கை போகிறீர்கள்? ☐ ஈ) எங்கை போறீர்கள்? ☐

13. 'மரத்தை' என்ற சொல்லில் வரும் சாரியை

அ) அற்று ☐ ஆ) மரம் ☐
இ) தை ☐ ஈ) அத்து ☐

14. தனித்து நின்று பொருள் தராத எழுத்து

அ) ஆ ☐ ஆ) போ ☐
இ) கை ☐ ஈ) க் ☐

15. "திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" எனக் கூறியவர்.

அ) திருவள்ளுவர் ☐ ஆ) சேக்கிழார் ☐
இ) பாரதியார் ☐ ஈ) புகழேந்தி ☐

16. துறைபோதல் என்பது

அ) முற்றும் கற்றல் ☐ ஆ) கைகொட்டுதல் ☐
இ) தன்னைமறத்தல் ☐ ஈ) உலகை ஆளுதல் ☐

17. முல்லை போன்ற முறுவல். இத்தொடரில் வரும் உவமேயம்

அ) முறுவல் ☐ ஆ) முல்லை ☐
இ) போன்ற ☐ ஈ) அழகு ☐

18. ஆங்கிலேயர் மலைநாட்டில் பயிரிட்ட பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று

அ) நெல் ☐ ஆ) குரக்கன் ☐
இ) சோளம் ☐ ஈ) தேயிலை ☐

19. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி

அ) சிங்களமொழி ☐ ஆ) தமிழ்மொழி ☐

இ) பாளிமொழி ☐ ஈ) எலுமொழி ☐

20. போர்த்துக்கேயருக்கு எதிராக சிங்கள மன்னர்கள் நடத்திய போருக்குப் படையுதவி செய்தவன்

அ) சங்கிலியன் ☐ ஆ) பண்டாரவன்னியன் ☐

இ) கயிலைவன்னியன் ☐ ஈ) எல்லாளன் ☐

21. நேற்று நண்பகல் கடும் வெய்யில். இதில் இடம் பெறாத தோன்றா உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) செயப்படுபொருள் ☐ ஈ) அடைமொழி ☐

22. வன்கண் என்பது

அ) தீயகண் ☐ ஆ) வன்சொல் ☐

இ) கொடுமை ☐ ஈ) வண்மை ☐

23. தனக்குப்பின் போர்த்துக்கேயருக்கு ஆட்சியென எழுதிக்கொடுத்த சிங்கள மன்னன்

அ) மாயாதுன்னை ☐ ஆ) தர்மபாலா ☐

இ) விசயபாகு ☐ ஈ) புவனேகபாகு ☐

24. உடம்படுமெய்கள்

அ) ப் வ் ☐ ஆ) வ் ய் ☐

இ) ப் ய் ☐ ஈ) ய் ர் ☐

25. சங்கிலி மன்னனைக் கோவாவிற்குக் கொண்டு சென்றவர்

அ) ஒல்லாந்தர் ☐ ஆ) போர்த்துக்கேயர் ☐

இ) ஆங்கிலேயர் ☐ ஈ) சிங்களவர் ☐

26. தமிழரின் ஆதிமரபினரான இயக்கரின் அரசு நிலவிய இடம்

அ) நாகதீபம் ☐ ஆ) நயினாதீவு ☐

இ) பூநகரி ☐ ஈ) கல்யாணி ☐

27. சென்ற ஆண்டு கோடை எரித்தது. இதில் வரும் ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) காலவாகுபெயர் ☐

இ) இடவாகுபெயர் ☐ ஈ) தொழிலாகுபெயர் ☐

28. தூற்றுதல் என்பது

அ) அழைத்தல் ☐ ஆ) பழித்தல் ☐

இ) உழைத்தல் ☐ ஈ) தழைத்தல் ☐

29. மூன்று பக்கமும் நீரினால் சூழப்பட்ட நிலம்

அ) தீவு ☐ ஆ) குடாநாடு ☐

இ) குடாக்கடல் ☐ ஈ) கழிமுகம் ☐

30. சத்திமுற்றப்புலவர் பாண்டிய மன்னனைக் காணச் சென்ற நகர்

அ) காஞ்சி ☐ ஆ) தஞ்சை ☐

இ) மதுரை ☐ ஈ) வஞ்சி ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைத்தமிழர் அறிவியல் துறையில் சிறந்து விளங்கினர். இதனைத் தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கழக இலக்கியங்கள் மூலம் அறியலாம். தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல் பற்றிய அறிவாகும். அறிவியல் கல்விகளில் மிகத்தொன்மையானது வானியல் கல்வி என்பர். உலகம் உருண்டை என்பதை மேலைநாட்டவர் கூறும் முன்பே திருவள்ளுவர் கூறியுள்ளார். வானவெளியில் மிகப்பெரிய விண்மீன் ஞாயிறு ஆகும். ஞாயிற்றைச்சுற்றியுள்ள பாதையை ஞாயிற்று வட்டம் என்று புறநானூறு கூறுகிறது. தானே ஒளி வீசக்கூடிய ஞாயிற்றை நாள்மீன் என்றும் ஞாயிற்றிடமிருந்து ஒளி பெறுபவையைக் கோள்மீன்கள் எனவும் அழைத்தனர். திங்கள் தானாக ஒளிவீசுவதில்லை என்பதனையும் கோள்களின் நிறம் வடிவம் முதலியவற்றைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர் தமிழர்.

1. பண்டைத்தமிழரின் அறிவியல் பற்றிக் கூறும் நூல்கள் இரண்டு தருக.

______________________________

______________________________

2. ஞாயிற்றிடமிருந்து ஒளி பெறுபவையை எவ்வாறு அழைப்பர்?

______________________________

______________________________

3. அறிவியற் கல்விகளில் மிகத்தொன்மையானது எது?

______________________________

______________________________

4. மேலைநாட்டினர் கூறும் முன்பே திருவள்ளுவர் கூறியது யாது?

______________________________

______________________________

5. பண்டைய தமிழர் எதில் சிறந்து விளங்கினர்?

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தாயின் தாலாட்டு எனும் பாடலில் களிறுகளைக் கொன்று அவற்றை உருட்டி விட்டமை எதற்கு ஒப்பிடப்படுகிறது ?

______________________________

______________________________

2. தமிழர் பண்பாட்டுப் பரவலை ஆய்வுகள் மூலம் வெளிக்கொண்டு வந்தவர் யார்?

______________________________

3. புலவரும் வறுமையும் என்னும் பாடத்தில் நாரைகள் எத்திசையிலிருந்து எத்திசை நோக்கிப் பறந்து சென்றன? அவற்றின் அலகுகள் எதற்கு ஒப்பிடப்படுகிறது?

______________________________

______________________________

4. அல்பேர்ட் சுவைட்சரை வியப்படைய வைக்கும் தமிழர் பண்புகள் இரண்டைத் தருக.

______________________________

______________________________

5. சங்கிலியனை மாற்றானிடம் காட்டிக் கொடுத்தவன் யார்? அவனுடன் போர்தொடுத்த ஐரோப்பியர் யார்?

______________________________

6. மகாவம்சம் எழுதப்பட்ட நோக்கங்கள் எவை ?

______________________________

______________________________

7. போர்த்துக்கேயர் எதற்காகக் கோட்டை அரசுடன் உடன்படிக்கை செய்தனர்?

______________________________

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

# தமிழ் மன்னன்

| | | | | |
|---|---|---|---|---|
| முழுவதையும் | ஆட்சியை | புகழ் | சொல்லியே | போற்றி |

எல்லாள மன்னனைப் பாடிடுவோம் - அவன்
ஏற்றம் பல சொல்லிப் போற்றிடுவோம்
வல்லவனாய் இங்கு வாழ்ந்தவனாம் - அவன்
வல்லமை ________________ வாழ்த்திடுவோம் !

நாற்பத்துநான்கு ஆண்டுகள் ஆண்டவனாம் - அவன்
நல்லரசு ________________ப் போற்றிடுவோம்
நீதி தவறாத மன்னன் அவன்
நேர்மையைப் ________________ நின்றிடுவோம் !

ஈழம் ________________ ஆண்டவனே - அவன்
இனிய நினைவதனைப் போற்றிடுவோம்
மங்காப் ________________ பெற்ற மன்னவனின்
மாண்பினைக் கூறிப் போற்றிடுவோம் !

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பகுசொல் உறுப்புகள் எவை?

_______________________________________________

பின்வரும் சொற்களைப் பகுத்து எழுதுக.

பார்த்தனன் ______________ தேடினார் ______________

2. இலக்கணவகையால் நால்வகைச் சொற்களையும் தருக. அவற்றில் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________________________________________

_______________________________________________

3. இனவெழுத்துகளைக் கண்டறிந்து எழுதுக.

மாந்தன் ______________ இஞ்சி ______________

அம்பு ______________ இன்று ______________

வண்டு ______________ நுங்கு ______________

4. பின்வரும் வேற்றுமைகளின் உருபுகள் இடம் பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

5 ஆம் வேற்றுமை ______________________________

3 ஆம் வேற்றுமை ______________________________

7 ஆம் வேற்றுமை ______________________________

5. பின்வரும் உவமை அணிகளை உவமானம், உவமேயம், பொதுத்தன்மை எனப் பிரித்து எழுதுக.

| | உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| மலைத்தோள் | ______________ | ______________ | ______________ |
| விற்புருவம் | ______________ | ______________ | ______________ |

புள்ளிகள் 15

**6) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

எனது பெயர் கரிகாலன். நான் இத்தாலியில் வாழ்கின்றேன். என்னுடைய மாமா டென்மார்க்கில் இருக்கின்றார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பேரும் தமிழ் பேசுவார்கள். சிற்றப்பா பிரான்சில் இருக்கின்றார். அவருடைய பிள்ளைகள் தமிழ்ப்பள்ளியில் தமிழ் கற்கின்றார்கள். நான் கோடை விடுமுறைக்குப் பிரான்சுக்கு விண்ணுந்தில் சென்றேன். அங்கு சிற்றப்பாவுடன் ஈபிள் கோபுரத்தைப் பார்க்கச் சென்றேன். ஈபிள் கோபுரம் முழுவதும் இரும்பினால் ஆனது. இரும்புகள் பொருத்துவதற்கு இருபத்தையாயிரம் ஆணிகள் பயன்படுத்தப்பட்டன. இதன் உயரம் 324 மீற்றர். இதில் 1665 படிகள் உள்ளன. இது மூன்று அடுக்குகளைக் கொண்டது. இங்கு அஞ்சலகம், கடைகள், உணவகங்கள் என்பன இருக்கின்றன.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- அல்பேர்ட் சுவைட்சர்
- நீர் கண்ட கனவு
- கோடைகால மாலைப்பொழுது
    - கோடைகாலத்துக்குரிய மாதங்கள்
    - கோடைகாலத்தில் ஏற்படும் மாற்றங்கள்
    - மாலைப்பொழுதில் காணும் காட்சிகள்
    - மாலைப்பொழுதில் உமது செயற்பாடுகள்

புள்ளிகள் 20